தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(03.01.2024 முதல் 07.01.2024)

அறிக்கைஎண்: 01/2024 தேதி : 02.01.2024

## அரியலூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31 - 32 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 22 - 23 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கா மழை பெறப்பட்டது.

## அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (03.01.2024 முதல் 07.01.2024).

| கடந்தவாரவானிலை (29.12.2023 முதல் 01.01.2024) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (03.01.2024 முதல் 07.01.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 29/12 | நாள்-2 30/12 | நாள்-3 31/12 | நாள்-4 01/01 | தேதி | நாள்-1 03/01 | நாள்-2 04/01 | நாள்-3 05/01 | நாள்-4 06/01 | நாள்-5 07/01 |
| 0.9 | 0.3 | 0.0 | 0.0 | மழை (மி.மீ.) | 2 | 2 | 2 | 2 | 9 |
| 31 | 31 | 31 | 32 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 32 | 33 | 33 | 33 | 32 |
| 23 | 23 | 22 | 22 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 22 | 21 | 22 | 22 | 21 |
| 7 | 6 | 5 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 5 | 3 | 4 | 8 |
| 85-72 | 86-68 | 86-66 | 87-60 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90-60 | 90-60 | 90-60 | 90-60 | 90-70 |
| 24 | 18 | 19 | 13 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 14 | 14 | 14 | 16 | 14 |
| கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட வட கிழக்கு | வட வட கிழக்கு |

## அரியலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 03.01.2024 முதல் 07.01.2024 லேசான தூறல் எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32 – 33 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21 - 22 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60 - 70 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14 – 16 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |

| | | |
|---|---|---|
| நெல் . | நடவு வயல் . | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலை சுருட்டுப்புழுக்களின் அறிகுறிகள் (சுருண்ட இலைகள், வெள்ளையான சுரண்டப்பட்ட இலைகள்) குறிப்பிட்ட அளவில் தென்பட்டால், மழை நின்ற பின் கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 50% SP @400 கிராம் அல்லது புளுபெண்டிமைட் 20 % WG @ 50 கிராம் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும். |
| | | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் புகையான் தாக்கம் பரவலாக தென்படுகிறது. இதன் பரவலை தடுக்க ஏக்கருக்கு குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.56 % SC 60 கிராம் அல்லது க்ளோதியனிடின் 50 % WG 8.0 – 9.6 கிராம் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும். |
| | | தற்போது நிலவும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலையுறை கருகல் நோய் பரவலாக தென்படுகிறது.இதன் பரவலை தடுக்க, ஏக்கருக்கு கார்பன்டெசிம் 200 கிராம் அல்லது புரோப்பிகோனோசோல் 200 மி.லி மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும் |
| கால்நடைகளுக்கு | ஆடு மற்றும் மாடு | இரவில் குளிர்ந்த வெப்பநிலை நிலவுவதால் கால்நடைகளை குறிப்பாக இளம் குட்டிகளை தகுந்த கொட்டகைகளில் அடைக்கவேண்டும். மேலும் வெப்பமூட்டிகள் (எ.கா. குண்டு பல்பு) பொருத்தினால் நுரையீரல் அழற்சி ஏற்படாது. |

## குறுஞ்செய்தி

உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI).

.

**இயக்குநர்**